83


# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 30-11-56 ★ விலை அணா ஒன்று. | இதழ் 22


83
1-57

## அரியலூர் விபத்து; ஓர் அறைகூவல்!

அரியலூர் இரயில் விபத்துச் செய்தி, தென்னாட்டு மக்களை பெருங் கலக்கத்தில் ஆழ்த்திருக்கிறது. இரயிலில் பிரயாணம் செய்வது ஆபத்துக்குரியவொன்று என்ற பீதியினை எங்கும் வாரியிறைத்துவிட்டன, அங்கு நிகழ்ந்த கோர நிகழ்ச்சிகள்!

காட்டாற்றுப் பெருவெள்ளம் பாலத்தைச் சிதைத்தது; தூத்துக்குடி செல்லும் துரிதவண்டி பன்னூற்றுவர் வாழ்வினைச் சிதைத்து விட்டது!

மழலைக் குழந்தைகள், மாண்புறு பெண்டிர், சிரித்து விளையாடும் சிறுவர் சிறுமியர், எழில் பூத்த இளம் மங்கையர்—இளைஞரேறுகள், குடும்பம் புரக்கும் தலைவர்கள், நண்பர்கள், நல்வாண்மையாளர் நூற்றுக் கணக்கிலே கையொடிந்தும், காலறுந்தும், உடற்சிதைவுண்டும், நீரில் மூழ்கியும் படுகோரமான சாவுக்கு இரையாகியுள்ளனர். எண்ணமுடியாத பெரு விபத்து! என்றும் நடவாத பயங்கர சம்பவம்!

இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ள பிணங்கள் சுமார் 150. இனியும் கிடைப்பன எத்தனையோ; கிடைத்தும் அழுகி உருத்தெரியாமல் போகிறவை எத்தனையோ; ஆந்தோ! நினைக்கவே இதயம் குலுங்குகின்றது.

இத்தகைய கோர இரயில் விபத்தினை தென்னகம் இன்னாள்வரை கண்டதில்லை. கண்டிருக்கிறது காங்கிரஸ்-டெல்லியாரின் ஆட்சியிலே!

அரியலூர் சோகக் காட்சி குறித்து, திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர், அபயில் தருமலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலே கூறுகின்றார்: "பிழைத்தவர்கள் எண்ணிக்கையைத்தான் சொல்ல வேண்டுமே தவிர, இறந்தவர்கள் எண்ணிக்கையை யாராலும், எப்படியும் சொல்ல முடியாது" என்று. எவ்வளவு உயிர் நாசம்; எவ்வளவு சொத்துச் சேதம்; எவ்வளவு நகை நட்டு—பணம் பத்திரம் போன்ற உடைமைகள் பாழ்; இனித்தான் தெரிய வேண்டும்.

இப்பெரு விபத்து இயற்கையின் கோளாறால் நேர்ந்தது; கடவுளின் செயலால் ஏற்பட்டது என்று கூறி, கடமைப் பட்ட எவரும் தப்பிவிட முடியாது. எனவேதான் பொறுப்புணர்ந்த டெல்லி போக்குவரத்து அமைச்சர், சாஸ்திரியல்லாத—லால்பகதூர் சாஸ்திரி தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார். அண்மையிலே ஐதராபாத்தருகே மகபூப் நகரில் பாலத்தின் மீது சென்ற புகைவண்டிக்கு இதுபோல் விபத்து நேர்ந்தது. அப்பொழுதே அவர் பதவி விலக விரும்பினார்; அதே போன்ற அரியலூர் பெரு விபத்து, அவர் எண்ணத்தை முடித்துவிட்டது. அவரது செயலினைப் பாராட்டுகிறோம். தன் பொறுப்பினைச் சரிவர நிறைவேற்ற முடியாமையே விபத்துக்குக் காரணம் என்ற உண்மையை ஒப்புகின்ற அந்த நியாயவுள்ளம், எத்தனை அமைச்சர்களுக்கு இருக்கின்றது?

செத்து மடிந்தோரின் குடும்பங்களுக்கு அரசாங்கம் சரியான நீதி வழங்க வேண்டும். விபத்தின் விளைவால் கதியற்றுப் போனவர்க்கு வாழ்வளிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நிருவாகிகளை விசாரித்து தண்டிக்க வேண்டும். இதே போன்று இந்தியப் பேரரசு

(10-ம் பக்கம் பார்க்க)

புத்தநெறி

# பகுத்தறிய வழிகூறினர்.

பி. வி இராமசாமி.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும்
அப்பொருள் மெய்ப் பொருள்
காண்பதறிவு

அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ்சிறப்பு.

பவுத்த நெறிக் கொள்கையின் குறள் சுருக்கக் கருத்து இவையேயாகும். அன்பர் பணிசெய்தலே இன்ப நிலை எய்தவழி எனவும் வழியுறுத்துகிறது. இத்தகைய இன்ப நிலையை எய்த பிறர் உதவியோ பிற அருளோ தேவையில்லை என்றும் அறிவுறுத்துகிறது.

இந்த அன்புநெறியை — பகுத்தறிவு இயலைத்தோற்றுவித்த புத்தர் பிரான் தம்மை அவதார புருஷனாகவோ—கடவுள் தூதனாகவோ கூறிக்கொள்ளவில்லை.

"உலகிலுள்ள எல்லா மனிதப்பிறவிகளைப் போலவே நானும் ஒரு மனிதன் தான்" என்று விளக்கமாக தம்மைப் பற்றித் தெரிவித்துக்கொண்டார்.

உலகம் காண்பதும், உலகுக்குப் பயன்படுவதுமான மெய்மைகளையே திரட்டிக் கூறினார். மனிதர்களுக்குள் மனிதராக வாழ்ந்தார். தமது முயற்சியால் மெய்யறிவு பெற்றார். தாம் கண்ட மெய்மைகளைப் பிறருக்கும் கூறினார்.

மூடநம்பிக்கைகளால் அறியாமையால் துயர்படும்மக்களின் பகுத்தறிவை துலக்கச்செய்து, அவர்களைத் தமது தெளிந்த அறிவு கொண்டு நன்னெறி கண்டு நடக்கச் செய்ய வழிகூறினார்.

"உனக்கும் உன் செயல்களுக்கும் அவற்றின் பலா பலன்களுக்கும் நீயே கர்த்தா. வேறு கர்த்தா கிடையாது" என்று 'தர்மபாதா' என்ற நூலில் சாக்கிய முனிவரே குறிப்பிட்டுள்ளார். நாம் உள்ளதும் அவைதுடமான நிலைமை, நமது எண்ணத்தின் செயலின் விளைவு என்பதும் இவர்கூறும் விளக்கம்.

'மகாபரிநிர்வாண சூத்ரா' என்பதில் புத்தர்பிரான் தமது சீடனை ஆனந்தரிடம், "ஆனந்தா உனக்கு நீயே ஒளியாக இரு உனக்கு நீயே அடைக்கலமளித்துக்கொள், தர்மத்தைக் கைப்பிடித்துநட, உன்னைத் தவிர்த்து வேறு யாரையும் உனது ரட்சகராக எதிர்பாராதே, அறிவுச் சிகரத்தை அடைய விரும்புவோரும நல்வாழ்க்கையை அடைய விரும்புவோரும், தன்னம்பிக்கைகொள்ள வேண்டும் சுயமுயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கூறியுள்ளார்."

"பாபத்தை நீக்குபவரும்—நீக்கக் கூடியவரும் இல்லை — உருவத்துக்கு மதிப்பு தராதே! நேர்மையை கவனித்து நடந்துகொள் என்று கூறி உருவ வணக்கத்தை வெறுக்கச்செய்கிறார். தெய்விகத் தாகார்களையும் இவர் கண்டிக்கிறார்.

—(வஜ்ரசேதிக)

இவர் கல் ஆல் நிழலில் அமர்ந்திருந்தபோது ஒரு பார்ப்பனன் இவரை அணுகி, "நீர் தேவனா? கந்தர்வனா? யக்ஷனா?" என்று வினவினான். அதற்கு சித்தார்த்தர் "உன் மனதில் உள்ள ஆசைகளால்தான், நான் தேவனா—கந்தர்வனா—என்று சந்தேகிக்கச் செய்தது. இவ்விதக சந்தேகத்தைத் தூண்டுவது ஆசை. அவ்வகை ஆசைகளை ஒழித்தவன்தான்—புத்தன்"

என்று பதிலளித்தார். புத்தன் என்றால் மெய்யறிவொளி பெற்றவன் என்று பொருள்.

இவரது இயற்பெயர் கவுதம சாக்கியர்.

கி. மு. 563-ஆண்டில், வட இந்தியாவில் கபிலவஸ்துநகர்— அண்மையிலிருந்த லும்பினி பூங்காவனத்தில் பிறந்தார்.

'சித்தார்த்தர்'–'கவுதமர்' இடப்பட்ட பெயர்.

கோரக்பூர் ஜில்லாவிலுள்ள புத்தர் பிறப்பிடத்தில் அசோக மன்னர் 239-ல் ஒரு நினைவுக்கல் நட்டு புத்தர் பிறந்த இடம் என்று எழுதிவைத்துள்ளார். தந்தை சுத்தோதனர்; தாயார் மாயா தேவி–பிரசவ மரணமுற்றதால வளர்ப்புத்தாய் பிரஜாபதி கவுதமி (அத்தை) வளர்த்தார், இவரது மனைவி யசோதாரா மகன் ராகுலன்.

சித்தார்த்தர் தமது 29-ம் வயதில், உலகமக்கள் படும் அல்லல்களைக்கண்டு அவர்களுக்கு நல்வாழ்வு தர வழிதேடி, வீட்டைவிட்டு ஏகினார்.

வேதமதத்தினர்கூறியகோட்பாடுகள் அறிவுக்குப் பிடித்தமாக இல்லை என்று கண்டார்.

தனித்து ஆலோசித்தார். மக்களின் அல்லல் அவதிகளுக்குக் காரணம் 'ஆசை' என்று கண்டார்,

இந்த ஆசையைக் கட்டுப்படுத்தி, நல்வழி நடத்தலே நல்வாழ்வுக்கு வழியெனக் கண்டார்.

இவருக்கு எதிராக இவரது தாயாதி தேவதத்தன் கிளம்பி புதுமதக் கண்டனன்—இவன் வேத மதச்சார்பினன் அஜா தசத்ருமன்னன் உதவிகொண்டு புத்தருக்கு பலவித இன்னல்களும் ஆபத்துகளும் விளைத்தான். இவர் மலை அடிவாரத்தில் அமர்ந்திருக்கும்போது இவர் மீது பெரும் பாறையுருட்டித் தள்ளப்பட்டது. மற்றொரு சமயம் மதவூட்டிய யானை ஏவப்பட்டது. இவ்விரண்டு ஆபத்துக்களிலும் இவர் தப்பினார்.

ஒரு பெண்ணை ஏவி, இவர்மீது விபசாரக்குற்றம் சுமத்த சதி செய்யப்பட்டது. ஆனால் சதி வெட்ட வெளிச்சமாகி இவர் தூய்மையாளர் என்பது நிரூபிக்கப்பட்டது. மற்றொரு பெண்ணை கொன்று இவர் இருப்பிடத்தின் முன் போட்டு இவர்மீது பெண் கொலைக்குற்றம் சுமத்தினர். ஆனால் உண்மை குற்றவாளிகளான அந்த காட்டுமிராண்டி மதவெறியர்கள் கண்டுபிடிக்கப்பட்டு— மரண தண்டனை விதிக்கப்பட்டனர். இத்தகைய எதிர்ப்பு அலைகள் இப்போதும் இம்மாதிரி கொள்கையாளர்களுக்கும் ஏற்பட்டு வருவது அறிந்ததே.

புத்தர் தமது கோட்பாடுகளைப்பரப்பக்கைக்கொண்டது பார்ப்பன மத முறையல்ல–அதாவது பூசை யாகங்கள்–மந்திரங்கள் முறையல்ல.

கால்நடையாக ஊர்தோறும் நாடுதோறும் சென்று பாமர மக்களும் உணர்ந்துகொள்ளும் முறையிலும்,

(9-ம் பக்கம் பார்க்க)

# எதிரொலி

கவர்னர் ஸ்ரீ பிரகாசா வடக்கு-தெற்கு பிரிவினைக்கூற்றை ஒழித்தவர்.

—ராஜாஜி.

கிடையாது! மல்லியாள மணம் கமழ்ந்தாலும், மனம் வடக்கைத்தானே நாடுகிறது?

* * *

இளம்பிள்ளையில் திரு. வி. க. நூல் நிலையம் கல்வி மந்திரி திறந்து வைத்தார்.

—செய்தி

திரு வி. க. எழுதிய நூல்களைப் படித்தால் தமிழன், தமிழ்நாடு, தன்மானம் என்று வருவதைக் காணச் சகியாமல் கண்களை மூடி வைப்பாரோ?

* * *

நூலுக்கும் நெசவுக்கும் அதிகத் தொடர்பு அவசியம்.

—பக்தவச்சலம்.

ஆமாம்; அமைச்சருக்கும், அறிவுக்கும் போல் இருந்துவிடக் கூடாதே!

* * *

சிவாஜி கணேசன் தாயார் செல்லம்மாள் அரியலூர் விபத்தில் சிக்கி மடிந்தார்

—செய்தி.

அவருக்கு அனுதாபம்; ஆனால், திருப்பதி வெங்கடாசலபதி... அட ஏழுமலையானே! நீ இருக்கிறாயா? செத்துவிட்டாயா?

* * *

'தமிழ்நாடு' எனப் பெயரிடக்கோரி திருப்புத்தூரில் 22 வயது இளைஞர் உண்ணாவிரதம்.

—செய்தி.

விருதை சங்கரலிங்கனாரைத் தொடர வீரர் காமராசர் வழிகாட்டுவாரோ?

* * *

அரிசனங்கள் மதம் மாறுவதால் நிலைமை உயர்ந்துவிடாது!

—ஜகஜீவன்ராம்

மாறாமலிருந்தும் உயரவில்லையே!


★ 7-12-56 ★

"பகுத்தறிவு" பக்கங்கள் உயருகின்றன; தரமும் உயருகின்றது; விலையும் சற்று உயருகின்றது.

## இலக்கியச் சோலையில்

ஒரு புதுப்பகுதி. செந்தமிழும் பகுத்தறிவும் செழிக்கும் வகை, நந்தமிழ் இலக்கிய நயங்களை எடுத்தியம்பும் எழிலோவியமாகத் தொடருகின்றது.

தோழர், ப. உ. சண்முகம் அவர்களின்
பண்புத் தமிழோவியம்

## தேசிங்குராஜன்

விரைவில் தொடங்குகிறது.

பக்கங்கள் 12. விலை 0-1-6.

## பகுத்தறிவு பொங்கல் மலர்.

சிந்தைக்கு விருந்தளிக்கும் பைந்தமிழ் முழக்கம்!

★

இன்பத்தேன் பிலிற்றும் இலக்கியச் செல்வம்!

★

குறைந்த விலையில் நிறைந்த மண மலராகத் தயாராகிறது.

விலை 0—8—0 தான்!

விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு இப்போதே சொல்லி விடுங்கள்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்.


# இதயம்

| மலர் 6 | சேலம் 30—11—56 | இதழ் 22 |
|---|---|---|


## தேர்தல் நிதி தாரீர்.

தென்னகத்து விடுதலை இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடப் போகின்ற செய்தி நாட்டு மக்களிடையே ஒரு பரபரப்பினை உண்டாக்கியிருக்கிறது.

ஆளும் கட்சினர் கண்மூடித்தனமாக நம்மைத் தூற்றுவதையும், தாக்குவதையும்; நமது கோரிக்கைகள், குற்றச்சாட்டுகளுக்கு விடையிறுக்க வக்கு வகையின்றி திக்குமுக்காடுவதையும், நாட்டுமக்கள் நன்கு உணரத் தொடங்கி விட்டனர்.

அதே நேரத்தில் நமது கொள்கை—குறிக்கோளினையும், கழகத்தின் நடைமுறையிலே பொலிகின்ற கடமையுணர்ச்சி, கண்ணியம்—கட்டுப்பாட்டு வலிமைகளையும் காணுகின்றனர். விமோசனம் கிட்டிடுமென்று நன்னம்பிக்கை கொள்கின்றனர்.

திராவிடத்தின் உரிமையற்ற இருண்ட வாழ்விலே செவ்வொளி பரப்பிடும் உதய சூரியனை, சுதந்திரவுணர்வு பெற்ற தமிழ் மாந்தர் ஒவ்வொருவரும் கைகூப்பி வரவேற்கக் காத்திருக்கின்றனர். அவர்களது நம்பிக்கை—நல்லுணர்வை மெய்யாக்க நம்மிடம் லட்சிய உரமிருக்கிறது. அந்த அளவுக்கு பணபலம் இல்லை. இதனை மறைப்பதிலே பயனில்லை.

ஜனநாயக வளர்ச்சிக்குத் தேர்தல் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்குத் தேர்தலில் ஈடுபட பணமும் முக்கியத்துவம் பெறுகிறது. ஆட்சிக்குத் தேர்தல் தேவை; தேர்தலுக்குப் பணம் தேவை; சாட்டையின்றி பம்பரம் ஆட்டுவது வெறும் பேச்சிலே முடியலாம். செயலாக்கத்திலே நிச்சயம் முடியாது.

24—11—56 சென்னை கூட்டமொன்றில் அறிஞர் அண்ணு பேசுகையில்: "தேர்தலில் நாம் 150 இடங்களுக்குப் போட்டியிடுகிறோம் என்றால், 'டிபாசிட்' தொகைக்காக நாம் கட்ட வேண்டிவருவது மட்டும் சுமார் ரூ. 49,000 ஆகும். ஒரு தொகுதிக்கு தலைமைக் கழகம் ரூ. 1000 தருவதானாலும். ரூ. 1,50,000 வேண்டியிருக்கும். போஸ்டர்கள் வெளியிடுவதற்கு ஒரு லட்சம் ரூபாய் தேவைப்படலாம். இவைதயெல்லாம் கருத்தில் கொண்டுதான் நமது பொதுச் செயலாளர் 5 இலட்சம் ரூபாய் வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்" என்று கூறியுள்ளார்கள். கழகத் தோழர்களும், அனுதாபிகள், ஆதரவாளரும் இதனை ஊன்றி நோக்கல்வேண்டும்.

மேலும், டிசம்பர் 10-ம் நாள்முதல் தேர்தல் நிதி திரட்டும் வாரமாகக் கொண்டாடி நிதி வசூலிக்குமாறு பொதுச் செயலாளர் நாவலர், நெடுஞ்செழியன் அவர்கள் வற்புறுத்தி வேண்டியுள்ளார்கள். பெரியதோர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு விட்டோம். கடமையைச் செய்யப் பின்தங்குவதோ, காலங்கடத்துவதோ அழகன்று. எனவே நாம் பணிவன்போடு வேண்டுகிறோம்; தேர்தல் நிதி தாருங்கள்! இலட்சிய வெற்றிக்கு பலம் தேடுங்கள்! தேச விடுதலைப் பணிக்கு வீசுங்கள் வெள்ளித் தோட்டாக்களை! அருமைத் தோழர்களே! தாய்மார்களே! உங்கள் நிதி எவ்வளவு? எப்போது? எங்கே? யாரிடம்? பதில் பேச்சாகவோ, எழுத்தாகவோ வேண்டாம். பணமாகவோ, 'கரன்சி'யாகவோ இருக்கட்டும்.

—ப கண்ணன்.

---

தலைமைக் கழக அறிக்கை எண் 11/59:

## தேர்தல் நிதி திரட்டும் வாரம்

[டிசம்பர் 10-ம் நாளிலிருந்து 16-ம் நாள்வரை]

### கடமையைச் செய்ய கிளைக் கழகங்களுக்கு வேண்டுகோள்.

நாடெங்கணும் அமைந்துள்ள தி மு. கழகக் கிளைகள் அனைத்தும், 1956 டிசம்பர் 10-ம் நாளிலிருந்து 16-ம் நாள்வரையிலும் உள்ள ஒரு வார காலத்தைத் 'தேர்தல் நிதி திரட்டும் வாரமாக'க் கருதித் தேர்தல் நிதி திரட்டும் பணிகளில் தீவிரமாக ஈடுபடும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

அந்த ஒருவார காலத்தில் திரட்டிடும் நிதியை நேரிடையாக தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி;-

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்' இராயபுரம் சென்னை 13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு கழகம், 28-11-56

# நந்திவர்மன்



ப. கண்ணன்

[முன் இதழ் தொடர்ச்சி]

எங்கள் பெருமன்னவரே வாழி
ஏதிலரை வென்றவரே வாழி
திங்கள் நிகர் தண்ணமுதே வாழி
சிந்தையினில் நல்லவரே வாழி-வாழி.

கழற்சிங்க நாயகரே வாழி
கருணை வடிவானவரே வாழி
சுழல் கின்ற வேல் மறவ வாழி
சூரர்குல காவலனே வாழி-வாழி

(தட்டத்தினின்றும் நீராஞ்சனம் எடுத்து, மன்னரின் நெற்றியில் இடுகிறாள் பன்னீர் தெளிக்கிறாள்)

நந்தி:- (மகிழ்ந்து கரம்பற்றி) கண்மணி சங்கா! களிப்பால் துள்ளுகின்றது நெஞ்சம். நான் துய்க்கின்ற மகிழ்வும் பெருமையும் உனது நல்லெண்ணத்தின் பிரதிபலிப்புகள்!

சங்கா:- நாதா! மிகைபடக் கூறுகின்றீர்கள். தங்கள் வெற்றிக் காவியத்தின் பொன்னேட்டிலே நான் ஓர் எழுத்து! வீரக்களஞ்சியத்தின் செம்பொருளில் ஓர் துரும்பு.

நந்தி:- சிறு துரும்பு கலன் நீர் தேக்கிற்றாம்! என் செங்கரும்பு நாட்டிற்கு வந்த பேராபத்தையே நீக்கிற்றே! சங்கா! நீ மகாராணி என்ற சொல்லின் மகத்தான இலக்கியம்!

சங்கா:- (நாணி) தங்கள் அன்பின் பெருக்கு, என்னை நாண வைக்கின்றது. ஆனாலும், இவ்வளவு அதிகமாகப் புகழக் கூடாது நாதா!

நந்தி:- மேலும் சுவைபடப் புகழ்வதற்குப் புலமையில்லையே என்று வருந்துகிறேன் நான்.

(சிறுவன் நிருபதுங்கன் ஓடிவருகிறான்)

நிருப:- அப்பா! அப்பா!

நந்தி:- வாடா கண்ணே! (வாரியணைத்து) நிருபதுங்கா! நீ விரும்பியபடியே பகைவரை வென்றேனடா. நமது தாயகம் மாற்றானுக்கு அடிபணியவில்லை; மாற்றாரையே நம் முன் பணியவைத்து.

நிருப:- சிங்கத்தின் முன்பு சிறுநரிகள் என்னப்பா செய்ய முடியும்? ஆனாலும் சித்தப்பா செய்தது..?

நந்தி:- பெரிய துரோகம். அன்றொருநாள் துடுக்குத்தனமாக அவனைப் பேசினாய். அடுக்காதென்று கோபித்தேன். இப்பொழுது தெரிகிறது அவனது வக்ரபுத்தி! சங்கா! உன் கருத்துக்கள் எதுவும் பலிக்காமல் போவதேயில்லை.

சங்கா:- மீண்டும் புகழ்ச்சிப் படலம் ஆரம்பமாகின்றதோ?

நந்தி:- நாணுகின்றாயா? அப்படியானால் சொல்லவில்லை. சங்கா! நமது வெற்றிக்காக நாளை சிவாலயத்தில் வழிபாடு. வருவாயோ?

சங்கா:- என் பாக்யமாயிற்றே நாதா!

நந்தி:- மதபேதமற்ற உன் பரந்த நோக்கம், மக்களுக்குத் தெரியவில்லையே!

சங்கா:- என்னுள்ளம் தாங்களறிந்தால் போதாதா?

நந்தி:- நானறிந்துதானே உன்னைவிரும்பினேன். மணந்தவனுக்கல்லவோ தெரியும் இந்த மல்லிகையின் நறுமணம்!

(அன்போடு முகவாய்க்கட்டையைப் பிடிக்கிறான்)

## காட்சி 19.

(தெரு. சேனாபதி விக்ரமகேசரி வந்துகொண்டிருக்க, பின்னால் வந்த பரதேசியொருவன் உடையைப்பற்றி இழுக்கிறான்)

விக்ரம:- (சினந்து) யாரடாவன் பரதேசிப் பயல்? என்ன குறும்படா உனக்கு?

பரதேசி:- சிவோகம் ... சச்சிதானந்தம் .... அடியேன் சக்திமுனையரின் சிஷ்யன்.

விக்ரம:- பொய் அவரது சிஷ்யர்கள் எல்லோரையும் எனக்குத் தெரியும். நீ யார்?

பரதேசி:- சிவோகம்...சச்சிதானந்தம்!

விக்ரம:- (சினந்து) சிவோகமாவது, சச்சிதானந்தமாவது; பிச்சைக்காரப் பயலே!

(கையால் தாடியைப் பற்ற, தாடியும், மீசையும் கையோடு வந்துவிடுகின்றன. எதிரே சந்திரவர்மன் நிற்கிறன்)

விக்ரம:- (வியந்து) அடடே! சந்திரவர்மரா? மன்னிக்கவேண்டும் மன்னிக்க வேண்டும். தாங்கள்........

சந்திர:- முதலில் அந்தக் கோலத்தைக் கொடும், பிறகு பேசுவோம்.

(மீசையும், தாடியும் வாங்கியணிந்து கொண்டு, சுற்றுமுற்றும் பார்த்து கவலையோடு)

சேனபதியாரே! நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்து விட்டது, திட்டம் நிறைவேற வேறு மார்க்கமில்லையா?

விக்ரம:- என் விஷயம், தலை தப்பினதே தம்பிரான் புண்ணியமாய் விட்டதே! ஓலையில் என் பெயர் இருந்திருந்தால், ஒழிந்திருக்குமே என் வாழ்வு!

சந்திர:- சேனபதியாரே! நடந்ததை மறந்து விடும், ஏதேனும் புதுவழிகாண்போம். இனி, நீர்தான் எனக்குத் துணை. (கைப்பற்றி) எப்படியாவது நான் மன்னனாக வேண்டும். உமது விருப்பம்போல் நடந்து கொள்வேன்; என்ன சொல்லுகிறீர்? என்ன சொல்லுகிறீர்?

விக்ரம:- (யோசித்து) நான் கேட்பதைத் தருவீரா?

சந்திர:- நிச்சயமாக.

விக்ரம:- (தயங்கி) வடிவழகி வித்யாவதி எனக்கு வேண்டும்.

சந்திர:- இவ்வளவுதானே! எடுத்துக்கொள்ளும் அந்தப் பச்சைக்கிளியைக் காட்டிலும் பல்லவ சாம்ராஜ்யம் எனக்குப் பெரிதாயிற்றே!

விக்ரம:- (தட்டிக்கொடுத்து) சபாஷ்! சபாஷ்! சந்திரவர்மரே! நாம் அடிக்கடி சந்திப்போம். வித்யாவதியை .......

சந்தி:- தக்க சமயத்தில் உம்மிடம் ஒப்படைப்பேன், கவலைவேண்டாம்.

(பச்சையும் முல்லையும் வாக்குவாதம் புரிந்தவண்ணம் வருகின்றனர். இவர்கள் பதுங்குகின்றனர்)

பச்சை:- முடியாது! முடியாது!! முடியாது!!!

(யாரோ என்றஞ்சி, சந்திரவர்மனும் சேனபதியும் மறைவில் பதுங்குகின்றனர்.)

முல்லை:- எம்ப்பா முடியாது? ஏன் முடியாதுன்னேன்?

பச்சை:- உச்சாணிக் கொம்பிலேருக்கிற இச்சிலிப்பழத்தை ஒன்னாலேமட்டுமல்ல, என்னாலேகூடப் பறிக்க முடியாது.

முல்லை:- எப்படியும் எனக்குப் பழம்வேணும். யாராலும் பறிக்க முடியாதுன்னு சொல்றே? நீ ஆம்பிளே; நான் பொம்பளே; வா என்னோட; நான் பறிச்சுத் தர்றேன் ஒனக்கு.

(அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு போகிறள் சந்திரவர்மனும் விக்ரமகேசரியும் வருகின்றனர் )

விக்:- (அலட்சியமாக) ஃபூ! இதுகள்தானா?

சந்தி: சேனபதியாரே! பச்சை என் கையாள், பித்தன் போலிருந்தாலும், எனக்காக எதையும் செய்வான். நம்பிக்கையோடு நமக்குப் பயன் படுவான்.

விக்:- நல்லது. நான் வரட்டுமா?

சந்தி:- (வருந்தி) சேனபதியாரே! மறைந்து வாழும் இந்த மானக்கேடு என்று தீரும்?

விக்:- கலங்காதீர். காலம்வரும், நான் வருகிறேன்.

(வேகமாகப் போகிறன் )

## காட்சி 20.

(சிவன் கோயில். சன்னிதியில் ஒரு பெண் பரதநாட்டியமாடுகிறாள். பக்தர்கள் சிலர் ரசிக்கின்றனர். மன்னர்—மகாராணி—நிருபதுங்கன் மூவரும் வந்து நின்று பார்க்கின்றனர். நாட்டியம் முடிந்து, பெண்ணும் பக்தர்களும் செல்லுகின்றனர்)

சங்கர:- நாதா! இது சிவன்கோயில் மட்டுமல்ல; ஓவியம், சிற்பம், இசை, நாட்டியம் முதலிய நற்கலை வளர்க்கும் சிறந்த கலைக்கோயில்!

நந்தி:- சங்கா! இங்கு இருப்பவை, கடப்பவை எல்லாம் ஆகம விதிப்படிதான். இவையாவும் மகத்தானவை, பல்லவர் பெருமையையூழிக் காலம்வரை நிலைக்க வைப்பவை.

சங்கர:- சிறந்த நற்கலைகள் சிரஞ்சீவித்துவம் பெற்றவை. சந்தேகமில்லை.

(அங்கு கிடந்த மலரோன்றை குனிந்தெடுத்து முகருகின்றள்)

(வளரும்)

தலைமைக் கழகம்: அறிக்கை—9/56

# ஒழுங்கு நடவடிக்கை.

கழகத்தின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் புறக்கணிக்கும் வகையிலும், தலைமைக் கழகத்தை அவமதிக்கும் வகையிலும், தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ள சென்னை மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர். இளம்பரிதி, சென்னை 43-வது வட்ட கிளைச் செயலாளர், தோழர், மு புரட்சிமணி ஆகிய இருவர் மீதும், 34-வது வட்ட தி மு க கிளையின் மீதும் கீழ்க்கண்டவாறு ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்கான காரண விளக்கங்கள் முறைப்படி சென்னை மாவட்டக் கழகக் கூட்டத்திலும் பொதுக்குழுக் கூட்டத்திலும் அறிவிக்கப்படும்.

தோழர், இளம்பரிதி அவர்கள் 23–11–56 முதல் 22–11–59 வரையில், மூன்றாண்டு காலத்திற்குக் கழகத்தில் சாதாரண பொது உறுப்பினராயிருப்பதைத் தவிர, தி மு கழகத்தின் எந்த ஒரு கிளையிலோ அல்லது மாவட்டக் கழகத்திலோ, அல்லது தலைமைக் கழகத்திலோ அல்லது துணை அமைப்புகளிலோ நிர்வாகியாகவோ அல்லது செயற்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும், மாவட்டப் பிரதிநிதியாகவோ அல்லது பொதுக்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும் அறவே உரிமை இல்லை என்று முடிவு செய்யப்படுவதோடு, கழகத்தின் சார்பாகவோ அல்லது துணை அமைப்புகளின் சார்பாகவோ நடைபெறும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பொறுப்பு ஏற்கவோ அல்லது சொற்பொழிவு ஆற்றவோ. அறவே உரிமை இல்லை என்று முடிவு செய்யப்பட்டு, அதன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

தோழர், மு. புரட்சிமணி அவர்கள் 23-11-56 முதல் 22-11-58 வரை இரண்டாண்டுகாலத்திற்குக் கழகத்தில் சாதாரண பொது உறுப்பினராயிருப்பதைத் தவிர, தி மு கழகத்தின் எந்த ஒரு கிளையிலோ அல்லது மாவட்டக் கழகத்திலோ, அல்லது தலைமைக் கழகத்திலோ தணை அமைப்புகளிலோ, நிர்வாகியாகவோ, அல்லது செயற்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும், மாவட்டப் பிரதிநிதியாகவோ அல்லது பொதுக்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும் அறவே உரிமை இல்லைஎன்று முடிவு செய்யப்படுவதோடு, கழகத்தின் சார்பாகவோ அல்லது துணை அமைப்புகளின் சார்பாகவோ நடைபெறும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பொறுப்பு ஏற்கவோ அல்லது சொற்பொழிவு ஆற்றவோ அறவே உரிமை இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டு, அதன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சென்னை 43.வது வட்டத் தி மு. கழக கழகக் கிளை 23–11–56 முதல்தலைமைக் கழகத்தின் மறு அறிக்கை வெளிவரும் வரையில் கலைக்கப்படுறதென்று முடிய செய்யப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (தலைமைக் கழகத்தின் உத்தரவுப்படி) மறுதேர்தல் நடைபெறும் வரையில் 43- வது வட்டத்திலுள்ள கழக உறுப்பினர்கள் அனைவரும் சாதாரண பொது உறுப்பினர்களாகவே இருந்து வருவார்கள்.

குறிப்பு:- சென்னை மாவட்டத்தின் புதிய செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகியோர் தேர்வு நடைபெறுவதற்கான நாள் விரைவில் அறிவிக்கப்படும்.

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்' சென்னை-13
23—11—56

மக்கள் முட்டாள்களாக இருந்த பொழுது கடவுள் அறிஞராகக் காட்சியளித்தார். மக்கள் அறிஞர்களாக மாறுகிற பொழுது கடவுள் முட்டாளாகக் காட்சியளிக்கிறார்!

—ஞானி.

## முன்னேற்றப்—
## —பாதையிலே

**கும்பகோணம்.**

தவரக்குறிச்சியில், 2-12-56 ஞாயிறு மாலை தோழர், ஏ. கே. வெங்கடாச்சாரி தலைமையில், எஸ். ஆர்: ராதா, கே.கே. நீலமேகம், இரெ. இளம்வழுதி M.A;B.L. டி. கே. சீனிவாசன் பேசுவார்கள்.

வள்ளுவர் நெஞ்சம்.

### உலக வாழ்த்து-௰.

அதிகாரம்-௧. பாட்டு-௰

பிறவிப் பெருங்கடல்-
-நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

எல்லாந் தெரிந்துணர்ந்த அறிவாளியின் துணையைக் கைகொண்டவர் காரண காரிய தொடர்ச்சியால் வாழ்க்கையெனுங் கடலை, அறிவின் துணையெனும் கப்பலால் எளிதில் கடப்பர். அதாவது, இன்ப வாழ்வு வாழ்வார் அறிவாளியின் அன்பைப் பெறுதவர் அல்லலனுபவிப்பார் தெளிவில்லாத காரணத்தால், என்பதாம்.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி


## பகுத்தறிவு.

7–12–56 முதல்

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 5-0-0
ஆறு மாதங்கள் 2-8-0
தனிப்படி 0-1-6

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை,

பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● கு. இரா. பரமசிவன்,
தெற்குரத வீதி,
காரமடை, கோவை மாவட்டம்.

எம். பழனிசாமி, தொளசம்பட்டி.

கே: பங்களாவாசியின் பணபலமும், தி.மு.க.வின் கொள்கை பலமும் ஒன்று சேருமா?

ப: தேவையில்லையே. தி.மு.க.வின் கொள்கைபலமும், பொது மக்களின் வோட்டு பலமும் இணைந்தால் போதும்.

* * *

கே: எடுத்ததற்கெல்லாம் அவன் செயல் என்போரின் நோக்கம் என்ன?

ப: நோக்கம் எதுவுமேயின்றி, நொடித்துப்போன பஞ்சை உள்ளத்தில்தானே இந்த ஏக்கம் பிறக்கிறது!

கு. இரா. பரமசிவன், காரமடை.

கே: பாம்பும் கீரியும் சண்டை பிடிக்க விடுவது குற்றமாம். "கணவனே கண்கண்ட தெய்வ"த்தில் செய்கிறார்களே; ஏன் தண்டிக்கவில்லை?

ப: இருமனைவியரை மணப்பதும் குற்றம்தான். முருகனுக்கு, வள்ளி தெய்வானைகளை மணம் முடிக்கும் திருவிழாப்பக்தர்களை தண்டிப்பதில்லையே! அதுபோல்தான் இது.

* * *

கே: பெரியார் காமராஜரை ஆதரிப்பது, பூனை எலிக்கு மனைவியாவது போல் இல்லையா?

ப: மனைவியாவது மட்டுமல்ல, சுதந்தரமற்ற, பகுத்தறிவற்ற அடிமை மனைவியாக எலியின் ஏசலையும், தூற்றலையும் என் பாக்யம் என்று போற்றி வாழவும் முனைந்துவிட்டது முதுபெரும்பூனை!

மா. அரங்கசாமி, கோவை

கே: உண்மைக் காதல் தோன்றிய உள்ளங்களின் வாழ்விலே, அது எத்தகைய விந்தைகளைப் புரியும்?

ப: மலையைக் கடுகாக்கும், இரவைப் பகலாக்கும், துன்பத்தை இன்பமாக்கும், இன்னும் எத்தனை எத்தனையோ அற்புதங்கள் செய்திடும்!

* * *

கே: இன்றைய சென்னை மந்திரிகளில் யாருக்குப் பார்வை மங்கல்?

ப: வடநாடு வளர்வதையும், தென்னாடு தேய்வதையும் காண முடியாதவர்கள்தானே மந்திரிகளாகத் தகுதி பெற்றவர்கள்! அனைவருமே அரைக் குருடுகள்தாம்.

தாரை-கரன், தாரமங்கலம்

கே: திருவிடம் தேய்ந்ததற்கு முக்கிய காரணம் ஆரியர்களா? வடநாட்டார்களா?

ப: வடநாட்டு ஆரியரும், அவர் வழிவந்த வடநாட்டு வாணிபரும் முக்கிய காரணமானவர்கள்தான்!

"பகுத்தறிவு"ப் பிரியன், சாத்தூர்.

கே: தி.மு.க.வில் எந்த மேடையில் யார் பேசினாலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற முப்பொருள்களையும் கூறுவது ஏன்?

ப: அவைகள், ஒரு கட்சிக்கும், நாட்டுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் என்பதால்தான்.

**பாரிஸ் அழகிகள்.**

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10 முன்பணம் அனுப்பினால் தபால் செலவு இலவசம் சாம்பிள்கள் கிடையாது

வீனஸ் டிரேடிங் கம்பெனி (த ப)
தபால் பெட்டி 1693,
சென்னை-1

வினோபா ராமாயணம்.

## நான் அறிந்த வரையில்.

ராமனை எதிர்த்து மக்கள் இங்கே பேசுவதில் நான் அறிந்தவரையில் இரண்டு கருத்துக்கள் வருகின்றன. ஒரு ஆட்சேபணை என்னவென்றால்; அவன் வட இந்தியன் என்பதும், ராமாயணம் வடஇந்தியா தென் இந்தியாவை எப்படி அடக்குவது என்ற சரித்திரம் என்பதுமாகும். இரண்டாவது ஆட்சேபணை; ராமனது வாழ்க்கையை மக்கள் எவ்வளவு ஆதர்சமாகக் கருதுகிறார்களோ அவ்வளவு ஆதர்சமாக இல்லையென்பதும், அதிலே மிகுதியான குறைகளும் இருந்தன என்பனவுமாகும்.

—வினோபா பாவே.
1-8-56 கோரப்பூர்.

திராவிட நாட்டில் ராமாயணத்திற்குப் பெரும் எதிர்ப்பு இருப்பதை இங்குள்ள வைதிகர்கள்—ஆரியர்கள் நன்கறிவர். எனினும், எதிர்ப்பினை அறிந்ததாகக் காட்டிக் கொள்ளவோ, எதிர்ப்புக்கு மதிப்பளித்து, சமாதானம் கூறுகின்ற வகையில் வெளிப்படையாகப் பேசவோ, எழுதவோ இங்குள்ள ஆரியர்கள் துணிவு கொண்டதில்லை. வடநாட்டு வினோபா துணிவோடு, தான் கொண்ட கருத்தினை வெளியிடுகின்றார், இவ்வாறு!

ஒரு பிரச்சினை எழுந்த பிறகு; அதை கொழுந்துவிட்டு எரியும்பொழுது, அப்படியொரு பிரச்சினை நாட்டில் இல்லாததுபோல் காட்டிக் கொள்வது நரித்தனம்; அதனைப் பிறர் அறியாமற் செய்ய முயலுவது பேடித்தனம்; பிரச்சினையை திரித்துக் கூறி, உண்மைக்கு எதிராகப் போரிட மக்களையும், அரசினரையும் தூண்டிவிடுவது ஈனத்தனம்! இவ்வகைத் "தனங்கள்" எதுவுமில்லாமல் இராமாயண எதிர்ப்புப் பிரச்சினையை அணுகி, ஆராய்ந்து, சரியோ தவறோ தன் மனதிற்பட்ட கருத்தினைக் கூறியுள்ளார் பெரியார் வினோபா. பாராட்டுகிறோம்.

—பகணன்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

எளிய பேச்சிலும் சீர்திருத்தங்களை எடுத்துரைத்து வந்தார் ஊருராகச் சென்றார். வீடுவீடாகச் சென்றார். மக்களுடன் சமத்துவமாகப் பழகினார். அறிவுவிளக்கம் செய்தார்.

இவ்வுலகில் இவ்வாழ்வில் இவ்வுடலில், தமது சொந்த நடவடிக்கைகளினால் இன்பம் எய்தும் வழிகளைக் கூறினார்.

புராணக் கோட்பாடுகளின் பித்தலாட்டங்களை வெட்ட வெளிச்சமாக்கினார். எதிர் மதத்தினருடன் அமைதியாக வாதம் செய்து அவர்கள் கோட்பாடுகள் பொய்யென்பதை நிரூபிப்பார். இவருடைய சொற்பொழிவுகளில் குட்டிக் கதைகள் பழங்கதைகள், புதுக் கதைகள் உவமானமாகக்கூறப்படும்.

கடவுள் கொள்கையில் கவலைகொள்ளாதே என்பது புத்தரின் அறிவுரை. நல்லறிவு கொள்; நல்லதை அறி; நன்னெறி நட; நல்வாழ்வுபெறு; அன்புசெலுத்து; எல்லாருக்கும் அன்பனாக இரு என்பதே இவரது நல்லுரைகளின் ரத்தினச்சுருக்கம்.

தெய்வீகக் கோட்பாடு கொண்டதுதான் மதம் என்றால் அந்தவகையில் பவுத்தம் ஒரு மதமல்ல. பவுத்தம் ஒரு நன்னெறி இயக்கம்.

ஒரு பிராமணனிடம் புத்தர் பிரான்,

"சாஸ்திரங்கள் பிரமாணங்கள் முதலியன பகலை இரவென்றும், இரவைப் பகலென்றும் சாதிக்கின்றன. நானோ பகலை பகலென்றும் இரவை இரவென்றும் கூறுகிறேன்" என்றார்.

பல மதத்தினரும் பலவிதக் கோட்பாடுகளைக் கூறுகின்றனரே எதை நம்புவது என்று சிலர் கேட்டபோது புத்தர் பிரான்,

"சந்தேகம் எழுவது இயற்கையே. பல தலைமுறைதத்துவமாக பலவிடங்களில் பலரும் கைக்கொண்டு நடந்திருக்கின்றனரே என்பதற்காக பரம்பரை பழக்கவழக்கங்களில் நம்பிக்கை கொள்ள வேண்டாம். பழைய முனிவர் ஒருவர் எழுதி வைத்திருப்பதை ஆதாரமாகக் காட்டுவதை ஏற்று எதையும் நம்பவேண்டாம் மனதிலே கற்பனை செய்துகொண்டதை உண்மையென்றோ ஆசரீரியென்றோ தேவ வாக்கென்றோ நம்பாதே எதையும் ஆராய்ந்து பார்—பகுத்தறிவுக்கு ஏற்றதாயின் மக்கள் பலருக்கும் பயன்படுவதாயின் அதையே ஏற்றுக்கொள்—கைக் கொண்டு நட"

என்று அறிவுரைகள் கூறினார்.

விசாரணையின்றி எதையும் ஏற்றுக் கொள்ளாதே என்பதே பவுத்தத்தின் முக்கிய புத்திமதி. மற்றும் அறிந்து கொள்ளவேண்டியதற்காகவும் கண்மூடித்தனமாக எதிலும் நம்பிக்கை கொள்ளலாகாதென்றும் எச்சரிக்கிறது.

மூடநம்பிக்கைத் திணிப்பு வேதமதத்தின் உயிர்த்தாது இந்த உயிர்த்தாதுவை சுட்டெரிக்கிறது பகுத்தறிவு நெறியான பவுத்தம்.

அர்த்தம் புலனாகாதது—புரியமுடியாதது என்பதற்காக அவற்றை கண்மூடித்தனமாக நம்புவதுதானே இந்து மதத்தின்படி தெய்வீகம். இந்த கண்மூடி நம்பிக்கையை புத்தர் கண்டிக்கிறார். அறிவியக்கத்துக்கு அதிக ஊக்கமளிப்பது பவுத்தம்.

"சந்தேகம் கொள்-விசாரணைசெய்-மெய்மையில் மனத் திருப்திகொள்—அதன்பின் அதனைக் கைக்கொண்டு நட" என்பது இவரது நன்மொழி.

"எனக்கு மதிப்புத்தர வேண்டுமே என்பதற்காக என் தர்மத்தை ஏற்றுக் கொள்ள வேண்டாம். தங்கத்தின் மாத்தை உரைத்து அறிவதுபோல், நான் கூறயனவற்றின் மாத்தையும் கவனித்தறிந்துகொள்" என்று வெளிப்படையாகக் கூறினார்.

புனிதம், புண்ணியம், தெய்வீகம் என்பது பித்தலாட்டப் பேச்சென்கிறார். இவ்விதம் கூறுவது குருடருக்கு குருடர் வழிகாட்ட முற்பட்ட கதை என்கிறார். கண்மூடித் தனமாக ஒரு கருத்தை ஏற்றுக் கொள்பவன் தேனின் சுவையறியாத கரண்டிக்கு ஒப்பாவான் என்கிறார்.

"மன்னனுடைய சொற்களை ஒப்புவிப்பதால் மன்னனாகிவிட முடியாது. அதே போல், வேதமொழிகள் என்பனவற்றை குருட்டுப்பாடம் செய்து ஒப்புவிப்பதால் அறிவொளி ஏற்பட்டு விட்டது. பரம்பரை பழக்க வழக்கத்துக்கும் அதிகாரத்துக்கும் தலைகுனிந்து நடப்பது மதிப்புக் பயனும் தந்துவிடாது. விசாரணையும் அனுபவமுமே அறிவு வளர்தரும். மதத்துறைத் கருத்துக்களை மறைத்துவைப்பவர்கள் திருட்டுக் கர்ப்பத்தை மறைக்கும் மாதைப் போன்றவர்" என்கிறார்.

"காயமடைந்தவர்களே, உங்கள் காயத்தை நீங்களே மருந்திட்டு ஆற்றிக் கொள்ளுங்கள்—பசித்தவர்களே, பசியாற உணவைத் தேடியுண்ணுங்கள். தாகவிடாய் கொண்டவர்களே, தண்ணீரிருக்கும் இடம் தேடிச்சென்று அந்நீரையுண்டுவிடாய் தணியுங்கள். இருட்

(பின்பக்கம் பார்க்க)

வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037–38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

டிலே அமர்ந்திருப்பவர்களே! வெளிச்சத்தைக் காணுங்கள். கவலையில் மூழ்கியிருப்பவர்களே! கவலைவிட்டுக் களிப்புக் கொள்ளுங்கள்."

இவையே புத்தநெறிச்சாரம்.

ஈசுவரன் மனிதனை உண்டாக்கவில்லை. மனிதன்தான் கடவுள் இலட்சணங்களை கற்பித்துக் கொண்டான். பலர் நம்புகின்றனர் என்பதற்காக கடவுள் இருப்பதாகத் தீர்மானிப்பதா என்பதே இந்த அறிவு மதம் தரும் விளக்கம். மெய்யல்லவற்றைக் கூறி மெய்யெனச் சாதிக்க முற்பட்டனர் வேத மதத்தினர். இவ்வகை மதநம்பிக்கைகள் வெறும் கற்பனைக் கனவே.

நடைமுறையில் காட்சிப் பொருளாகக் கடவுளைக் காண்பதற்கில்லை; எந்த மதமும் கடவுள் தன்மையைத் திட்டவட்டமாகக் கூறவில்லை. அந்தந்த வட்டார மக்கள் தத்தமது சூழ்நிலை பழக்க வழக்க வாய்ப்பு வசதிகளுக்கேற்றபடி கடவுள் தன்மையைக் கற்பனை செய்து கொண்டனர்.

மனிதத்தன்மையை திட்டவட்டமாக நிர்ணயிக்கப்படாதபோது, மனிதர்கள் அறியாத அந்தக் கடவுளின் தன்மையை எப்படி நிர்ணயிக்க முடியும்? நரகம், மோட்சம் ஆகியவை பகுத்தறிவு ஒப்பமுடியாத கற்பனை.

பவுத்த மதத்தில் 'கர்மம்' என்றும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இந்துமதம் குறிப்பிடும் குறுகிய அர்த்தத்திலல்ல. கர்மம் என்பது மனிதருக்கு மாத்திரமல்ல, உலகம் முழுமைக்கும் உரியதென்கிறது பவுத்தம்.

திரு. குருதத்தர் என்பவர் எழுதியுள்ள பவுத்த நூலில் "கர்மா" என்பது பற்றி குறிப்பிட்டிருப்பதாவது:-

சிருட்டிப்பவர்களுமில்லை; சிருட்டிக்கப்படுபவர்களுமில்லை. மனிதர்களுக்கு உண்மை உயிரினமல்ல நடப்பும், காரணங்களும் சாதாரண நிலைமையில் அவற்றைப் பிறப்பிக்கின்றன. மனிதவுடல் ஸ்கந்தங்களின் தற்காலிகக் கூட்டு அமைப்பு. இந்தக்கூட்டமைப்பின் துவக்கமே பிறப்பு. இந்தக் கூட்டமைப்புச் சிதைவே சாவு.

இந்தக் கூட்டமைப்பு நிலைமை நீடித்திருக்கையில் நல்லது கெட்டது செய்யப்படுகின்றன. இவையே மக்களின் பிற்கால மகிழ்ச்சிக்கும், தொல்லைகளுக்கும் வித்தாகின்றன. இவ்வாறாக பிறப்பும், சாவும் முடிவின்றித் தொடர்கின்றன. மனிதர்கள் பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில் தாங்களாகவே நடமாடுகின்றனர். அவர்களுடைய நடவடிக்கைகளே இவற்றை விளக்குகின்றன.

இயற்கைப் பொருள்களின் நடவடிக்கைகளே—இயக்கமே பல்வேறு மலைகள், ஆறுகள், காடுகள், நாடுகள் முதலியனவற்றை உண்டாக்குகின்றன.

இந்தக் கடவுள்கள் உருவம் கோரமாகவுள்ளனவே!

உள்ளத்தூய்மை கொண்டோர் முகத்திலே கொடுமைச்சாயல் கொண்டிரார். நல்ல பழக்க வழக்கம் முறைகள் கொண்ட நாட்டில், நல்ல நிலைமையும், கெட்ட பழக்கவழக்கங்கள் கொண்ட நாட்டில் கேடுகளும் நிலவும் அவரவர்களின் செய்கைகளுக்கேற்ப முகமும் உடலும் தோற்றமும் ஏற்படுகின்றன. அதற்கேற்றபடி பலனுமடைகின்றனர்.

இயற்கை விதிகளை வகுத்துத் தருவாருமில்லை; எனவே, இயற்கை விதிகளை மீறுவதென்பதுமில்லை. அவ்விதம் மீறுவதைக் காட்டித் தண்டிப்பாருமில்லை. ஆகவே, கடவுள் தண்டனை என்பது ஆதாரமற்றதாகிறது. மோட்சமும் நரகமும் அறியாமையின் கற்பனை. கர்மம் என்றால் செயல். இச்செயலின் விளைவு தத்தமக்குரியது. வேதம் கூறுவதுபோல் "கர்மா" என்பது கடவுள் தொடர்பு கொண்டதல்ல. ஆத்மா என்பது ஐம்புலன்களின் உணர்ச்சிப் பீடமே!

> தவறு செய்தால் வெட்கப்படுதல் நல்லதே. ஆனால் அதை ஒப்புக்கொள்ள ஒரு நாளும் வெட்கப்படாதே
>
> —ஆவ்பரி.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

இன்னொன்றையும் சிந்திக்க வேண்டும். அனைத்திந்திய ரீதியில் பரந்த நிலப்பரப்பிலே, பல்லாயிரக்கணக்கான மயில்களிலே ஓடுகின்ற புகைவண்டித் தொடர்கள் அத்தனையின் நிருவாகத்தையும் டெல்லியிலே பிடித்து வைத்துக் கொண்டிருப்பது நியாயம்தானா? அஃது திறமையோடு பணியாற்ற முடிந்த செயல்தானா? அரியலூர், மகபூப் நகர் விபத்துக்களும், அமைச்சர், சாஸ்திரியாரின் ராஜிநாமாவும் இயலாமையை அங்கை நெல்லிக்கனி போல் காட்டிடவில்லையா? ஏன் இன்னும் அகில இந்தியா? எண்ணிப் பார்க்க வேண்டும், தென்னாட்டுக் கதர்ச்சட்டைகளேனும். அரியலூர் விபத்து, அரசியலாரின் சிந்தனைக்கு ஓர் அறை கூவல்!

பத்து ஏக்கர் உழுபவனிடம் பத்தாயிரம் ஏக்கர் நிலத்தை ஒப்படைத்தால், வேளாண்மையின் தரம் குறையுமா? உயருமா? அறுபதினாயிரம் மனைவியரைக் கட்டிக் காத்து மலடிகளாக்கிய தசரதச் சக்கரவர்த்தியின் கதையை, ராமராச்சியம் விரும்பும் புண்ணிய சீலர்கள் அரசியலில் புகுத்தி, அகில இந்திய ரீதியாக்கிய அநீதியை ஒழிக்க வேண்டும். தரம் வளர, திறமை உயர, நிருவாகம் வலுப்பெற, நாட்டு மக்கள் நலம்பெற வேறு வழியில்லை!

அரியலூர் இரயில் விபத்தில் அநியாயமாக பலியான மக்களுக்கும், அவர்தம் குடும்பத்தினர்க்கும் ஆறாத்துயரம் பொங்கிட ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவிக்கின்றோம்.

—வாலி.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்–1 குமாரசாமிப்பட்டியின்றும் வெளியிடப்படுகிறது.